"ஆவிந் நிரை," "சாந்தியின் வெற்றிக்கொடி," இதில் முக்கியமானவை.

தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஞு புரட்டாசிமீ 1உ (17-9-'22.) | ப. 21.

விஷய அடக்கம்.

1 வர்த்தமானம் ....
2 சாந்தியின் வெற்றிக்கொடி ....
—(ஸ்ரீமான் S. V. கோபால கிருஷ்ணய்யர், M. A., M. L., எழுதியது) .
3 சில அற்புதங்கள் ....
—(ஓர் வக்கீலைக்காரனால் எழுதப்பட்டது)
4 ஆவிந்நிரை ....
—(ஸ்ரீமான் "ராமசந்திரர்" எழுதியது)
5 இராமபத்ரன் ....
—(ஸ்ரீமான் Y. மகாலிங்க சாஸ்திரி, B. A., B. L., எழுதியது)
6 புயற்காற்று ....
—(ஸ்ரீமான் V. நாராயணய்யர், M. A., M. L., எழுதியது)

வர்த்தமானம்

லண்டன், ஸெப்டம்பர் 8.

லண்டனில், பிரிடிஷ் அஸோஸியேஷன் முன், இந்தியாவில் லெப்டினண்ட் கவர்னராயிருந்த லார்ட் மெஸ்டன் என்பவர் ஓர் உபன்னியாசம் செய்தார்.

அதில், இந்தியாவும், இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின்கண், ஓர் முக்கியமான பாகமென்று வர்ணித்தார். பிரிடிஷ் குடியேற்ற நாடுகளில், தமக்கொருவிதத்திலும் கௌரவமில்லையென்றே இந்தியாவிலுள்ளவர்கள் எண்ணுவது உண்மையென்றும், ஆயின் ஐரோப்பிய மகாயுத்தத்தில் அவர்கள் செய்திருக்கும் காரியங்களால், இந்தியாவுக்கு ஓர் புதிதான "அந்தஸ்து" ஏற்பட்டு விட்டதென்றும் சொன்னார்.

"கானடா, ஆஸ்ட்ரேலியா, ந்யூஸீலண்ட், இவைகளைப்போலவே, இந்தியாவும் சரிசமானமாக நடத்தப்படவேண்டுமென்று பிரிடிஷ் ராஜ்யதந்திரிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்; அது நிஜம்தான். ஆகிலும், அவர்களுடைய இம்மரியாதை வார்த்தைகளை இந்தியர்கள் பரிசோதித்துப்பார்க்கும்போது, குடியேற்றநாடுகளில் தங்களுக்குக்கிடைக்கும்கௌரவமெல்லாம் வேறு விதமாகவே இருப்பதென்பதை நன்றாய் உணர்கிறார்கள். இந்தியர்களது குறைகளைத் தீர விசாரிப்பதற்காக ஒரு கமிஷன் நியமிக்கவேண்டும்."

இப்படி லார்ட் மெஸ்டன் பேசியிருப்பதாய் ராய்டர் மூலமாக அறிகிறோம்.

பாபு மோதிலால் கோஷின் மரணத்தைப்பற்றிப் பூனா முனிஸிபாலிடி மெம்பர்கள் தமது வருத்தத்தைத் தெரிவித்தார்கள். இம்மாதம் 8ம்தேதியன்று "சிவாஜி மந்திர" த்தில், ஓர் மீடிங் நடைபெற்றது. ஸ்ரீமான் கேல்கர் அக்கிராசனாதிபதியாய் இருந்தார். அப்பொழுது ஸ்ரீமான் போபட்கர், கரண்டிகர், வைத்தியா, கோகலே இவர்களெல்லோரும் காலஞ்சென்ற பாபு மோதிலால் கோஷைப்பற்றிப் புகழ்ந்து பேசினார்கள். அவருடைய மரணத்தால் மஹாராஷ்டிரத்தில் அனைவரும் துக்கத்தில் ஆழ்ந்து கிடப்பதாய்த் தெரிவிக்கப்பட்டது.

ஸிம்லா, ஸெப்டம்பர் 9.

டாக்டர். அன்னிபெஸண்ட், ஜம்னுதாஸ் த்வாரகதாஸ், ஸ்ரீமான் சேஷகிரி அய்யர், கபீருதீன் ஆமத், இவர்கள் எல்லோரும், ரெயில்வே போர்ட் ப்ரெஸிடெண்டை நேரில் பார்த்து மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுடைய கஷ்ட நிஷ்டூரங்களை விபரமாய் சொல்லப் போகிறார்கள்.

இந்தியா லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளியில் Mr. N.M. ஜோஷி என்பவர் மூன்றும் வகுப்பு ரெயில்வே பிரயாணிகளுக்கு கவர்மெண்டார் செய்யவேண்டிய சௌகரியங்களைப் பற்றி, ஓர் 'தீர்மானம்' கொண்டுவந்தார். இந்தியா அதிகாரிகள் அதை எதிர்த்தார்களாயினும், கடைசியில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தியா கவர்மெண்ட் வரவு செலவு விஷயமாய் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து, செலவைக் குறைப்பதற்கான மார்க்கங்களை கண்டுபிடிக்க ராஜாங்கத்தார் ஒரு கமிட்டி நியமித்திருக்கின்றனர். அதில் லார்ட் இன்ச்கேப் என்பவர் சேர்மனாக இருப்பார். அக்கமிட்டி, வரும் நவம்பர் மாதம், 8-ம் தேதி, டில்லியில் கூடும்.

அளவுக்கு மிஞ்சி சாப்பிடுபவர்களுக்கு ஜெர்மனியில் ஓர் வரி விதிக்கப்பட்டது போலும்! அதனால், ஹோடல் வைத்திருப்பவர்கள் எல்லோரும் தமது தொழிலை நிறுத்தி விடும்படியாய் ஏற்பட்டு விடுமென்று கவர்மெண்டாருக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

சமீபத்தில் இந்தியா லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில், H. E. லார்ட் ரெடிங் பேசியதைப்பற்றி, இங்கிலண்டிலுள்ள பல பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன :—

டெய்லி க்ராணிகிள்—"வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்குப் போன காலத்தில், 'நாஷனலிஸ்ட்' பக்கத்தைச் சார்ந்தவர்களைப் பார்க்கிலும், 'மாடரெட்'கள் நடந்த விதத்தைத்தான் நாம் உற்று நோக்கவேண்டும். வேல்ஸ் இளவரசரை ஜனங்கள் மிகுந்த உத்சாகத்தோடு வரவேற்க வேண்டுமென, 'மாடரெட்' கக்ஷியார் இந்தியர்களைக் கிளப்ப முடியவில்லை. இந்தியா சீர்திருத்த சட்டத்தை இந்தியர்களுக்குக் கொடுத்தருளிய H.I.M. ஜார்ஜ் சக்கிரவர்த்தியைச் சேர்ந்தவராய் இருந்ததால், H. R. H. வேல்ஸ் இளவரசரை எதிர்கொண்டு அழைப்பதில் 'மாடரெட்' பக்கத்தார் இன்னும் அதிகமாய் சிரமம் எடுத்துக்கொண்டு, (ஜனங்களுக்கும் குதூகலத்தை உண்டாக்கி,) இருக்கலாம்."

டெய்லி டெலிகிராப்—'எக்ஸ்ட்ரிமிஸ்ட்ஸ்'களுடன் வாதாடுவதில் சிறிதும் பிரயோஜனமில்லை. ஆகிலும், 'மாடரெட்' மெம்பர்களாவது H.E. வைஸ்ராயின் இங்கிதமறிந்து நடப்பார்களென நம்புகிறோம். கொஞ்சமேனும் மறைக்காமல் H. E. லார்ட் ரெடிங் இப்போது பேசியதால் பல நன்மைகளுண்டாகும். மேலும் இந்தியா கவர்மெண்டார் தைரியமாய் நடந்துகொள்வது நிரம்பவும் சிலாக்கியமாயிருக்கும். ஸ்வராஜ்ய ஸ்வதந்திரத்தைப் படிப்படியாகத்தான் இந்தியர்கள் அடையவேண்டுமே யல்லாமல், அதற்கு அவர்கள் அவசரப்படுவதும் பெருத்த தீமையையே விளைவிக்கும்."

டெய்லி ந்யூஸ்—"H.E. லார்ட் ரெடிங் மிகுந்த ஆண்மையோடும், சாமர்த்தியத்தோடும் தனது ஸ்தானத்தை வகித்துவருகின்றார். ஸ்வய ஆக்ஷிஸ்வாதீனத்தை அடைந்திருக்கும் எந்த தேசத்திலும், அவர் ஜனங்களை ஆளுவதற்குத் திறமையுள்ளவராகவே இருப்பார். * * "

வெஸ்ட்மின்ஸ்டர் கேஸட்—"ஒத்துழையாமைக்காரர்கள் விஷயமாய் இந்தியா கவர்மெண்டார் நடந்து வருவது மிகவும் யுக்தமே. அவர்களைக் கலங்காமல் எதிர்ப்பதுதான் இந்தியா அதிகாரிகளின் கடமையாயிருக்கின்றது. பிரிடிஷ் I. C. S. உத்தியோகஸ்தர்களுக்கும் இனிமேல் மிக்க சிரமமாயிருக்கும். ஆகிலும், அவர்களே, மிகவும் நிதானத்தோடும், தாராள குணத்தோடும் தமது காரியத்தைச் செய்து முடிப்பார்களென்று எண்ணுகிறோம். * *"

இந்தியா மந்திரியாயிருந்த Rt. Hon. E. S. மாண்டேகூ, நமது தேசத்திற்கு மறுபடியும் ஒருமுறை வர உத்தேசித்திருந்தாராயினும், சில அந்தரங்க காரணங்களுக்காகத் தன் எண்ணத்தை மாற்றிவிட்டார். அடுத்த வருஷம் அவர் இந்தியாவுக்கு வருவார்.

தான் செய்ததோர் பிரசங்கத்திற்காக, ஸ்வாமி சிரத்தானந்தர் 'அரெஸ்ட்' செய்யப்பட்டாரென்று செய்தி எட்டுகின்றது.

ஹைதராபாதில், H. E. H. நிஜாம் ராஜ்யத்தில் "எக்ஸெகுடிவ் கௌன்ஸில்" ப்ரெஸிடெண்டாயிருந்த ஸர். ஆலி இமாம் தனது வேலையிலிருந்து திடீரென விலகிவிட்டார். அவர் இப்போது பாட்னா ஹைகோர்ட்டில் வக்கீலாய் "ப்ராக்டிஸ்" செய்ய ஆரம்பித்துவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

சாந்தியின் வெற்றிக்கொடி.

["யங் இந்தியா" வென்னும் பத்திரிகையில் வெளியாகி இருக்கும் ஓர் வியாசத்தின் மொழி பெயர்ப்பு.]

அயல் வீட்டுப் பெண்கள் ஓடி விளையாடுங் காலைப்பொழுதெல்லாம், ஒவ்வொரு நாளும், சாந்தி தவறாமல் நூல் நூற்று வந்தாள். போன வருஷம் மகாத்மா காந்தி அவளுடைய கிராமத்திற்கு வந்திருந்த பொழுது, சாந்தி அவரைப் பார்த்தாள். மகாத்மாவும் அவளை உச்சி மோர்ந்து நூல் நூற்கச் சொன்னார். அவளும் சரியென்றாள். முதலில் நல்ல பஞ்சு கிடைப்பது கஷ்டமாயிருந்தது; அது கிடைத்தவுடன், இராட்டினம் சரியாய்ச் சுற்றவில்லை. அது அந்த ஊர் காங்கிரஸ் ஸபைக்கு வேலை செய்யுந் தச்சன் செய்தது. மகாத்மா வந்து போனவுடன், அவன் நூற்றுக் கணக்கான ராட்டினங்களைச் செய்து விற்றான். அவைகளெல்லாம் மோசமாகவே யிருந்தன. பொருத்துகளெல்லாம் ஆட்டங்கொடுத்தன. கதிர் சரியாய்ச் சுற்றுவதில்லை. சாந்தியின் தகப்பனாருக்கோ இவைகளை யெல்லாங் கவனிப்பதற்கு நேரமில்லை. அவருக்கு வேறு காரியங்கள் மிகுதியாயிருந்தன. ஆகையால் சாந்தி அந்த ராட்டினத்தோடு எப்படியோ கொஞ்சகாலந்தள்ளினாள். பிறகு, ஒருநாள், அவள் வீட்டில் ஏதோ வொரு சிறுவேலை செய்யவந்த தச்சன் அவள் ராட்டினஞ் சுற்றுவதைப் பார்த்தான். சந்தோஷம் பூரித்துத், தன் குழந்தையை அழைத்து வந்து, சாந்தி நூற்பதைக் காட்டினான். சாந்திக்கும் ஒரு திவ்வியமான புதிய ராட்டினஞ் செய்து கொடுப்பதாகச் சொன்னான். அடுத்தவாரம், தன் சொற்படி, அழகான ஒரு ராட்டினத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, மேலும் அது சுற்றுவதைப்பார்க்கத் தன்னுடைய பெண்ணையும் அழைத்துக் கொண்டு, அத்தச்சன் வந்தான். புது ராட்டினம் வெகு அழகாய்ச் சுற்றிற்று. சாந்தியின் சிறு விரல்களின் ஸ்பர்சத்தினாலேயே ஆனந்தம் அடைந்ததுபோல், மெல்லத் துவனித்து, கைகள்படுமுன், இலேசாகச் சுழன்றது.

மூன்று மாதங்கள் கழிந்தன. சாந்தியின் தகப்பனாரை அரசாங்கத்தார் பிடித்துப்போய்ச் சிறையிலிட்டார்கள். பாவம்! சாந்திக்கு, முதலில், தன் தகப்பனாரை விசாரணை செய்த நியாயாதிகாரியின் மீது அதிக கோபம் வந்தது. அயலூரிலிருந்து வந்திருந்த அவளுடைய மாமா, விசாரணை நடக்கும் பொழுது, நியாயஸ்தலத்தில் அவளுடன் கூட உட்கார்ந்திருந்தார். சாந்திக்குத் தாயாரில்லை. சாந்திக்கு மூன்று வயதிருக்கும் பொழுதே, அவளுடைய தாய் காலஞ் சென்றாள்.

"மாமா! அவனைக் கண்டால் எனக்கு எரிச்சல் உண்டாகிறது. அவன் நம்முடன் சேருகிறதற்கென்ன? இந்த ராஜ்யத்திற்கு ஏன் உதவி புரிகிறான்" னென்றாள். "அப்படிச்சொல்லாதே, குழந்தாய்! மகாத்மா என்ன சொன்னார்? நீ கோபம் கொள்ளக்கூடாது," என்றார் மாமா.

சாந்தியின் தகப்பனாருக்கு இந்த சம்பாஷணை பாதி காதிற் பட்டது போலும். அவர் திரும்பிக் குழந்தையைப் பார்த்துப் புன்னகை செய்தார். அப் புன்சிரிப்பின் அழகும் சாந்தமும் சாந்திக்கு ஒரு நாளும் மறந்து போகவில்லை. பின் வந்த நெடுமாதங்களில் அவள் தன்னந்தனியாயிருந்து நூற்கும் பொழுதெல்லாம், அப்புன்சிரிப்பும்,

அதின் வருத்துமே அவளுக்குத் தர்ரகமாயிருந்தன.

தீர்ப்புச் சொன்னார் நியாயாதிபதி. "நன்னடத்தைக்கு ஜாமீன் கொடுக்கவேண்டும். அன்றியில் ஒரு வருஷம் கடுங்காவல்." தெரிந்த விஷயந்தான். சாந்தியின் தகப்பனார் சிறை புகுந்தார். சாந்தியையும் அவளுடைய மாமாவையும் காண்பதற்கு அநேகர் அவள் வீட்டிற்கு வந்தார்கள். சிலர் சிரித்து, தண்டனையைத் துச்சமாக நினைத்தவர்போல் நடித்தார்கள். வேறு சிலர் நீண்ட முகத்துடன் வந்து, குழந்தைக்கு ஆறுதற் சொல்லத் தலைப்பட்டார்கள். அவளுடைய திவ்விய முகத்தைப் பார்த்ததும அவர்களுக்குக் கண்ணீர் ததும்பிற்று. ஆனால் சாந்தி நகைத்தாள். "ஐயோ! பாவம்! தனக்கு வந்திருக்குந் துயரத்தின் கொடுமையை குழந்தையேதறிவாள்," என்று சொல்லிவிட்டுத் தத்தம் வேலைகளை கவனிக்கச் சென்றார்கள்.

கொஞ்சநாள் வீட்டிற் கோஷமாயிருந்தது. பிறகு எல்லாம் ஓய்ந்தது. சாந்தியையும் அவளுடைய மாமாவையும் பார்க்க, அந்த ஊர் காங்கிரஸ் ஸபை துணைக் காரியதரிசியான ராமசந்திரனைத் தவிர வேறு ஒருவரும் வருவதில்லை.

"ராமா, நான் உனக்கு நல்ல நூல் தருகிறேன். உங்களுடைய ஆபீசுக்காக ஒரு பெரிய கொடி செய்வதற்கு, வேண்டிய மட்டுங்கொடுக்கிறேன். நீ, அதைக் கொண்டு, ஒரு கொடி செய்து வருவாயா?" என்றாள் சாந்தி.

"ஆகட்டும்," என்றான் ராமசந்திரன்; "அதற்குப் பச்சைச் சாயமும், சிவப்புச் சாயமும் போட்டு, பேஷாக நெய்து எங்கள் ஆபீசின்மேல் பறக்க விடுகிறேன்."

சாந்தி நூற்றாள். நிச்சப்தமான அந்த வீட்டில் சுழலும் ராட்டினத்தின் மந்தத்துவனியே யினிமையாயிருந்தது. அவளுடைய தகப்பனாருடைய புன்னகையின் பிரகாசமே பிரதிபலித்து வீடெங்கும் ஒளிவீசிற்று.

"வெள்ளை நூல் என் பார்ஸி சகோதரிகளுக்கு. சீக்கர்களுக்கும், கிரிஸ்தவர்களுக்குமதுவேதான். இந்தியாவில், சிறு கணத்தவரென்றும் சங்கியையதிகமற்றவரென்றும் நினைத்து, ஸ்வராஜ்யம் வந்தால் தமக்கு என்ன தீங்குகள் நேரிடுமோவென்று பயப்படுகிறவர்களுக்கெல்லாம் அடையாளமாக சுத்த சுப்ரமான வெண்மையை நூற்கிறேன். ஏன், அம்மா லக்ஷ்மி! நாம் அவர்களை ஏன் கஷ்டப்படுத்தப்போகிறோம்? நாம் ஏன் அப்படிச் செய்யவேண்டும்? அவர்களெல்லோரும் நமக்கு அக்கா தங்கைகளல்லவா?"

லக்ஷ்மீயின் தகப்பனார் வக்கீல் வேலைபார்த்துக் கொண்டிருந்தார். சாந்தியின் தகப்பனாருக்கு அந்தரங்க சிநேகிதர். சாந்தியின் தகப்பனார், ஒத்துழையாமை இயக்கம் பிறந்தவுடன், வேலையை நிறுத்திவிட்டார். லக்ஷ்மீயின் தகப்பனார், அப்படித் தியாகஞ்செய்யப்போதுமான ஐசுவரியமில்லையென்றார். பெரிய ஸம்ஸாரியானதால், பொதுப் பணத்தை வாங்கிக், காலக்ஷேபம் செய்ய அவருக்கு மனமில்லை. சாந்தியின் தகப்பனார் தனவானாயிருந்தார். ஆனால் அவர் வேலையை நிறுத்தவே, கூடிய சீக்கிரத்தில் வீட்டிலிருந்த ஆடம்பரங்களும் போக போக்யங்களுங் குறைந்து விட்டன. அதை சாந்தி அறியக்கூடாதென்று அவர் முயன்றும் பயன்படவில்லை. லக்ஷ்மீயைவிடத் தானேழைதானென்பதை சாந்தி யெளிதிலறிந்து கொண்டாள். ஆனால் சாந்திக்கு மனோதைரியம் பூர்ணமாயிருந்தது.

'கொடியின்வெள்ளை பாகத்திற்காக நூற்கிறேன். வெள்ளையின் நிழலில் அனைவருக்கும்க்ஷேமமுண்டு. பயமென்பதேயில்லை.—இல்லையா? லக்ஷ்மி! மனிதர்களெல்லாம் ஒருவரையொருவர் பகைப்பானேன்? கண்டு பயப்படுவானேன்? எல்லோரும் பரஸ்பரம் அன்போடு வாழ்ந்தாலென்ன!"

வெள்ளைக்கும் பச்சைக்கும் பெரும்பான்மையான சிவப்பைச் சேர்த்து சாந்தி நூற்றாள். நூற்ற நூலை ராமசந்திரனிடங்கொடுத்தாள். எப்பொழுதுதான் கொடி நெய்து வரப்போகிறதென்று ஆவலுடன் காத்திருந்தாள். சொன்ன நாளில் வராதபொழுது, சிறிது மனம் குன்றினாள். ஆனால் கொஞ்சந் தாமதித்துக் கொடியும் நெய்து வந்தது. வீட்டுவாயிலிற்கு ஓடி, ராமசந்திரன் கையிலிருந்து அதை ஒரே பிடுங்காய்ப் பிடுங்கி கீழே விரித்து, அதை சுற்றிச்சுற்றி ஆனந்தத் தாண்டவமாடினாள். "எல்லாம் நான் நூற்றது. நானே நூற்றது," என்றாள்.

அடுத்த நாட்காலையில், காங்கிரஸ் ஆபீஸின் மேற் கூரையில், சாந்தியின் கொடியை விரித்துப் பறக்கவிட்டார்கள். அப்பொழுது அதைப்பார்க்கத் தெருவில் சில சிறு குழந்தைகளும், ஒன்றிரண்டு பெரியோர்களும் கூடியிருந்தனர். சிறிது தூரத்தில் ஒரு போலீஸ்காரனும் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். ஜனங்கள் "மகாத்மா காந்திக்கு ஜய்" யென்று சொல்லவே, அவன் முகத்திலிருந்த கொடும் பார்வையும் விலகிற்று. தென்றலெழுந்தது. கொடியும் அத்தென்றலில் ஒளி வீசப் பறந்ததைக்காண அவனும் சந்தோஷமடைந்தாற்போல் தோன்றிற்று.

அன்று மாலையே, மகாத்மாவைச் சிறையிலிட்ட சமாசாரம் வெளிவந்தது, "சாந்தி! சாந்தி! உனக்குத் தெரியுமோ? அம்மா! பாவம்! காந்தியையும் ஜெயிலில் அடைத்து விட்டார்களா"மென்று சொல்லிக்கொண்டே லக்ஷ்மீ ஓடிவந்தாள். "அதனாலென்ன இப்பொழுது? நடந்ததெல்லாம் நடக்கட்டு"மென்றாள் சாந்தி. சொல்லி வாய் மூடுமுன், தன்னுடைய தகப்பனார் சிறை புகுந்த காலத்திலுங்கூட அழாத வண்ணம் அழுதாள்.

"சாந்தி! உன் அப்பாவை, விலங்குபோட்டு நாட்டுராவும் கேப்பை அரைக்கச் சொல்லுகிறார்களாமே!" யென்றாள் லக்ஷ்மீ. "இருக்கலா"மென்று சொல்லி, சாந்தி திரும்பவும் விம்மி விம்மி யழத்தொடங்கினாள். இதைச் சொன்னதைப்பற்றி லக்ஷ்மிக்கு அதிக வருத்தமுண்டாக, சாந்தியின் கண்களைத் தனது தலைப்பால் துடைத்தாள்.

"ஏன், அம்மா சாந்தி! இந்த வெள்ளைக்காரர்களெல்லாம் ஏன் இப்படிச் செய்கிறார்கள்? மகாத்மா நமக்கு ஸ்வராஜ்யம் வாங்கிக்கொடுத்த பிறகு இதற்கெல்லாம் நாம் பழிக்குப்பழி வாங்கவேண்டாமா?" என்றாள் லக்ஷ்மீ.

"ஐயோ? இல்லை, இல்லை? லக்ஷ்மி! மகாத்மா சொன்னது உனக்கு மறந்துபோய்விட்டதா? சர்வ ஜனங்களுக்கும் சாந்தியும் நன்மையுமே பெருகவேண்டும்,—அம்மா! வெள்ளைக்காரர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்றாயே;—அவர்களுக்கு ஞானமுமில்லை; லோபமும் அதிகம். நாம் எல்லோரும் அவர்களுக்கு ஏதோ தீங்கு செய்துவிடுவோமென்று பயப்படுகிறார்கள். ஆனால் கூடிய சீக்கிரத்தில் ஸ்வாமி அவர்களையும் நல்லவர்களாக்கிவிடுவார்," என்றாள் சாந்தி.

இதற்குப்பிறகு அநேக தினங்கள் கழிந்தன. அவ்வூரிலிருந்த காங்கிரஸ் வேலைக்காரர்களனைவரையும் அரசாங்கத்தார் கைது செய்தார்கள். ராமசந்திரனுக்கும் ஒரு வருஷங்கடுங்காவல் கிடைத்தது. சாந்தியோ, நூற்றாள், நூற்றாள், என்றும் நூற்றுக்கொண்டே யிருந்தாள். ஒருநாள் தன்

கொடியென்னமாதிரி யிருக்கிறதென்பதை யறிய விரும்பி, மாலை வேளையில் தன் மாமாவோடு பட்டணத்திற்குச்சென்று பார்த்தாள். அவளுடைய கொடி இன்னமும் வீசிப்பறந்துகொண்டிருந்தது. காங்கிரஸ் ஆபீஸில் புது வாலிபர்கள் இருந்தார்கள். கலாசாலையிற் கல்விபயின்று கொண்டிருந்த சிறுவ ரநேகர் படிப்பைத்துறந்து, காங்கிரஸ் வேலையைச்செய்வதற்குத் தலைப்பட்டனர். தென்றல் வீசவே, சாந்தியின் கொடியும், வெள்ளையும், பச்சையும், சிவப்பும் முழுதுந் தெரியும்படி வீசிப் பறந்தது. அவளும் சந்தோஷமடைந்தாள்.

மகாத்மாவின் வாஸம் கொடுஞ்சிறையில்; ஆயினுமென்ன? அவர் கொடி யின்னும் இறக்கப்படவில்லை. அஸ்ஸாம் தேசத்துச்சிறுவர்கள் எவ்விதக்கொடுமைக்குமஞ்சாமல், சாந்தியின் கொடியைப்பறக்கவிட்டுப் பாலனஞ் செய்கிறார்கள். சிந்து தேசத்துச் சிறுவர்களும் சாந்தியின் கொடியைப் பாதுகாத்து வருகின்றார்கள். உத்கலத்திலுமப்படியே. அரசாங்கத்தாரென்ன செய்தாலுஞ் சரி; நிர்ப்பயமாய், சிறுவர்களும் சிறுமிகளும் துவஜத்தைப் பாதுகாத்துவருகின்றனர். மகாத்மாவின் உடல் சிறைபுகுந்தாலென்ன? சாந்தியின் த்வஜம் இன்னும் மேம்பட்டே யிருக்கிறது. நண்பனே! அக்கொடியின் மேம்பாட்டிற்காக நீ யென்ன செய்திருக்கிறாய்? நமக்கு உரிதான ஸ்வராஜ்யத்தை இந்தியாவிடத்திலிருந்து பிடுங்கிக்கொள்ள இப்பூமண்டலத்தில் ஒருவராலுமினி முடியாதென்பதை நீ அறியாயோ?

திருநெல்வேலி, S. V. கோபாலகிருஷ்ணய்யர்,
14—9—1922 M.A., M.L.

சில அற்புதங்கள்

மூளைக்குள்ளும் இரணவைத்தியமாம்!

(இது "ஓர் வக்கணைக்காரனால்" எடுத்து எழுதப்பட்டது.)

இங்கிலண்டிலுள்ள "பிரிடிஷ் மெடிகல் அஸோஸியேஷன்" என்னுமோர் சங்கத்தில், அதின் "ப்ரெஸிடெண்ட்" ஸ்தானத்திலிருக்கும் ஸர். வில்யம் மாகீவன் என்பவர், வெகு சமீபத்தில், ஒருவனுடைய மூளைக்குள் தான்செய்த "ஆபரேஷனை"ப்பற்றிப்பேசினார். தனது தலைக்குள் கிளம்பிய சிரங்கு உபத்திரவத்தால், அவன் இறந்துவிட்டவன் போலவே காணப்பட்டான். ஆகிலும், கருவிகளைக்கொண்டு அவனுடைய சுவாஸம் நிற்காமல் செய்து, அவன் மண்டையைப் பிளந்து, அதற்குள்ளிருந்த சிரங்கு சம்பந்தமான அசுத்தத்தையெல்லாம் வெளியே எடுத்தவுடன், அவன் திடீரென விழித்துக்கொண்டான்.

மூளைக்குள் ஆபரேஷன் செய்வதால், குருடர்கள் பார்வையை அடைவார்கள். செவிடர்களுக்குக் கேட்கும் சக்தி வந்துவிடும். வாதம் முதலியவைகளால் நடமாடத் திறமையற்றவர்கள் திடத்தோடு எழுந்திருப்பார்கள். இன்னும் தான் இழந்த சக்திகளையும் ஒருவன் திரும்பப் பெற்றுவிடலாம்.

சில வருஷங்களுக்குமுன், தலைக்குள் குண்டுகள் பாய்ந்துவிட்டால், சாவுதான் முடிவாயிருந்தது. ஆயின், இப்பொழுது பலர் பிழைத்தெழுந்தவர்கள் உண்டு.

சிரோ ரோகத்தால் மிகவும் கஷ்டமடைந்தவன் ஒருவனை, X—கிரணங்களைக்கொண்டு பரீக்ஷை செய்துபார்த்ததில், அவனது மூளையின் ஓர் பாகம் அழுகி வந்ததை வைத்தியர்கள் கண்டுபிடித்தார்கள். அவனோ மயக்கத்தில் ஆழ்ந்துகிடந்தான்.

வைத்தியர்களும் அந்த பாகத்தை எடுத்தெறிந்துவிட்டு, அதற்கு பதிலாக வேறொன்றை அவ்விடத்தில் வைக்க நிச்சயித்தனர்.

அன்றையதினம்தான் ஒரு குழந்தை அவ்வைத்திய சாலையில் பிறந்து இறந்துவிட்டது. அதின் மூளையை உடனே எடுத்து, அதைக்கொண்டு அவனுக்குத் தாம் நினைத்தபடியே "ஆபரேஷனு"ஞ் செய்து முடித்தார்கள். ஒரு வாரத்தில் அவன் குணமடைந்தான்!

இவ்வாறு, மூளைக்குள்ளும் இரணவைத்தியம் செய்வதால், ஆச்சரியமான நன்மைகளுண்டாகின்றன.

தன்னுடைய மண்டைக்குள் கிளம்பியிருந்த "டூமர்" என்னும் ஒரு ரோகத்தால், நிரம்பவும் சிரமப்பட்டவன் ஒருவன் "ஹாஸ்பிடலுக்கு" வந்து சேர்ந்தான். அங்கே வைத்தியர்கள் அவன் மூளைக்குள் ஆபரேஷன் செய்து, அட்"டூமரையும்" எடுத்தெறிந்தனர். உடனே அவன் சௌக்கியமடைந்ததுடன் அல்லாமல், ஏழு வருஷகாலமாய்த் தான் இழந்துபோன பார்வையையும் திரும்பப் பெற்றான்.

மூளைக்குள் ஆபரேஷன் பண்ணுவதால், துஷ்டர்களும் நல்லவர்களாக மாறிவிடுகிறார்கள். இதுவே மிக்க அத்புதமாயிருக்கின்றது.

ஒருவன் இருநூறுதரம் திருடியதற்காக, ஐந்துவருஷம் தண்டிக்கப்பட்டான். அவனுக்கு வயது 43. எப்பொழுதும் திருடுவதிலும், குற்றஞ்செய்வதிலுமே அவன் மனம் பதிந்திருந்தது. ஜெயிலில், அவனைப் பரிசோதித்ததில், அவன் மண்டையில் ஒரு பள்ளமிருப்பதை வைத்தியர்களறிந்தார்கள். பால்யத்தில் அவன் கீழே விழுந்ததும் மேலுமப்படி விழுந்ததால்தான் அப்பள்ள முண்டாயிற்றென்பதும் தெளிவாய் விட்டவுடன், வைத்தியர்கள் "ஆபரேஷன்" செய்யத்தீர்மானித்தார்கள். மூளையை பலமாய் அழுத்திக்கொண்டிருந்த அவனுடைய கபாலத்தின் ஒருபாகத்தை எடுத்துவிட்டார்கள். உடனே வியக்கத்தக்கவாறு, பலமாறுதல்கள் அவனிடம்தோன்றின. குற்றம் செய்வதிலேயே கண்ணாயிருந்த அவனது மனோபாவங்களெல்லாம் முற்றிலும் மாறுபாடு அடைந்ததும் பெரிய விநோதமாகவே யிருந்தது. மேல் கோர்ட்டார் அவனை விடுதலை செய்யும்படி உத்திரவிட்டார்கள். அவனும் இப்போது நம்மைப்போலவே ஸன்மார்க்கத்தில் காலக்ஷேபம்செய்து வருகிறான்.

இதைப்பார்க்கிலும் மற்றொரு கேஸ் ஆச்சரியத்தை உண்டுபண்ணக்கூடும். ஒரு கொலைபாதகன் ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்தான். காவலாளர்களும் அவனைக் கண்டால் நடுங்குவார்கள். இப்படி ஜெயிலில் மூன்று வருஷகாலம் சென்றது. ஒருநாள் ஒரு ஸர்ஜன் அங்கு வந்து, அவனைப் பரிசோதித்துப் பார்த்ததில், அவனது தலையின் பின்புறத்தில் ஓர் ஆழமான பள்ளம் தோன்றிற்று. இதனால், அவனுடைய கபாலத்தின் ஒரு துண்டானது மூளைக்குள் பதிந்து கிடக்கவேண்டுமென்றே ஸர்ஜனும் ஊகித்தார். ஆபரேஷன் செய்து பார்த்ததிலும் அப்படியே இருந்தது. அவர் அத்துண்டை வெளியே எடுத்தெறிந்தார். அவனும் ஸ்வஸ்தமடைந்தான். அவனுடைய முகமும் ஆச்சரியமாய் மாறிற்று. புத்தியும், சுறுசுறுப்பும், பிரியமும், தாக்ஷிண்யமும் அவனிடம் நன்றாய் விளங்கின.

—"இண்டியன் டெய்லி ந்யூஸ்"

ஆவிந்நிரை

(Rights of Translation Strictly Reserved.)

நான், ஒருநாள் பகலில், ஊருக்குக் கீழ்புறத்திலுள்ளதோர் பெரிய தென்னந்தோப்பில் குறுக்குப்பாதையின் வழியே செல்லும்போது, அங்குள்ள அரசமரத்தடியில் பசுக்கூட்டம் ஒன்று காணப்பட்டது. அதின் மத்தியில் கோபியர் சூழ நின்ற கண்ணனையும், பாற்கடலில் பள்ளிகொண்ட பரமனையும் போன்று, கறுத்த காளையொன்று படுத்திருந்தது. அதனருகில் ஓர் அழகிய 'செவலை'ப்பசு நின்று, கொம்புகளையும் வாலையும் ஆட்டிக்கொண்டு, ஏதோ பேசுவதுபோல் தோன்றிற்று. மற்ற பசுக்களும், கன்றுகளும் தங்கள் செவிகளை முன்புறமாகக் கவிழ்த்து, அச்'செவலை'யினிடத்திலிருந்து வரும் விஷயங்களைப் பருகுவதுபோல் இருந்தன. காளையும் தன் முகத்தைத் தூக்கிப், பற்களைக்காட்டி, ஆனந்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. பசுக்களின் பாஷையறிந்த நானும் மெதுவாய் அங்கு சென்று அருகிலுட்கார்ந்தேன். அப்பொழுது நடந்த விருத்தாந்தத்தை சுருக்கமாக எழுதுகிறேன்.

செவலை:—"பிரியர்களே! நமக்குக் கடவுளது கிருபையினால் கிடைத்த குணங்களே நன்மை தீமைகளுக்குக் காரணமாகின்றனவென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். நாம் கானில் கிடைக்கும் புல்லைத்தின்று, புனலையருந்தி, நமது கன்றுகளுக்கேயன்றி, பிற மாந்தர்களுக்கும் பால் அளிக்கும் தன்மை அடைந்திருக்கிறோம். இது காரணமாக, நம்மைக் கவர யெத்தனித்து, அரசாகளும் மற்றையோரும் போர்புரிவது வழக்கமாயிருக்கின்றது. ஆதியில் நமக்கெல்லாம் தாயும் தெய்வமுமாகிய காமதேனு வசிஷ்ட பகவானுடைய ஆசிரமத்தில் இருக்கையில், அதை யடைய ஆவல்கொண்ட விசுவாமித்திரர், தனது வில் வலிமையெல்லாங் காட்டி வெல்லமுடியாமல், தவம் செய்ய முயன்றாரென்பது தெரிந்தவிஷயமே. பிற்காலத்திலும் பசுநிரைகளை அரசர்கள் கவர்ந்து செல்வது பாரதத்திலும் வருணிக்கப்பட்டிருக்கிறது. நமது பாலையருந்தும் மாந்தர்கள் நம்மைத் தாயினும் தொழத்தக்க தெய்வமெனை இப்பரத கண்டத்தில் பூஜிக்கிறார்களென்பது நிஜமே."

"அதெல்லாமிருக்க, இப்பொழுது நேரிட்டிருக்கும் சங்கடம் வேறு தன்மையுடையதாய் இருக்கிறது. நாம் அநேக காலமாய் ஜாதி 'எடையர்களால்' பாதுகாக்கப்பட்டு வந்தோம். அப்பொழுது அவர்கள், தாங்கள் பலனடைவதன்றி, நம்மையும் நமது கன்றுகளையும் விருத்திசெய்து வந்தார்கள். கொஞ்சகாலமாய், மாந்தர்கள் குடிப்பதை நிறுத்தி, காபி குடிக்கத்தலைப்பட்ட நாள் முதல், நாம் வியாபாரிகளிடம் சேர்ந்ததனால், அவர்கள் தங்கள் இலாபத்தையே கருதி நம்மை கவனிப்பதில்லை. அதிலும் சிலகாலமாக அவர்கள் பாலை மாத்திரம் கறந்துகொண்டு, நம்மைப் போஷிக்கும் தொழிலை வேறு சிலரிடம் விட்டுவிட்டார்கள். அதற்குப் பிரதிப்பிரயோஜனமாக நமது எருவையும் நீரையுமே அவர்கள் அடைகிறார்கள். அவர்களுடைய பிரயாசைக்குத்தக்க பலனில்லாததால், நமது உணவைச் சுருக்கவேண்டி வந்துவிட்டது. ஆகவே நமது கன்றுகளுக்கு முன்னர் கிடைத்துக்கொண்டிருந்த கொஞ்சம் பால் கூட இப்பொழுது கிடைக்கும் வழியில்லை. இவ்விதமான சங்கடங்களை நிவர்த்திக்கும் மார்க்கத்தைத் தேடுவது அவசியம்; ஆகையால் உங்களுக்குத் தோன்றும் உபாயங்களைச் சொல்லுங்கள்," என்று சொல்லிப் படுத்தது.

உடனே அந்நிரையினின்றும் ஓர் பெரிய வளைவு கொம்புப்பசு எழுந்து, முகத்தையும் வாலையும் இளப்பிக்கொண்டு பின்வருமாறு சொல்லிற்று.

வளைவுகொம்பன்:—"சகோதரிகளே, சகோதரர்களே! நமக்குக் கூர்மையான கொம்புகளும், கடினமான கொம்புகளும் நம்மை வருத்துவோரைத்தடுப்பதற்காகவே கடவுள் அமைத்தார். அவைகளை அடிக்கடி உபயோகித்து, கறவையை நிறுத்திவிட்டால், நம்மை மறுபடியும் காட்டிற் கோட்டிவிடுவார்கள். நாமும் யதேச்சையாக மேய்ந்து, கன்றுகளோடு சுகித்து வாழலாம். நம்முடைய குமாரர்களின் தேகப்பிரயாசையினாலேயே பயிரிடும் தானியம் முதலியவைகளின் ஸத்தை மாந்தர் அடைந்து, அவர்களுக்கு உபயோகமாகாத தவிட்டையும், பிண்ணாக்கையும் நமக்களித்து, அமிருதத்துக்கு சமானமான பாலை நம்மிடத்தில் பெற்றுக்கொள்ளுகிறார்கள். காட்டில் கடவுளால் அமைக்கப்பட்ட புல்பூண்டுகளை மேய்ந்து, நமது கன்றுகளுக்கு மாத்திரம் பால் சுரந்து, காலம் கழிப்பதற்கென்ன தடை இருக்கிறதென்று எனக்குத் தோன்றவில்லை. அப்படியே செய்வதுதான் சரியெனை நினைக்கிறேன்," என்று சொல்லி நிறுத்தியது.

உடனே குச்சிக்கொம்பு வெள்ளைப்பசு வொன்று எழுந்து நின்று, வாயைத்திறந்து, மெல்லிய குரலெடுத்துக் கூறியதாவது,—

குச்சிக்கோம்பன்:—'வளைவுகொம்பர் சொல்லியதெல்லாம் சரியே. ஆனாலும், நாம் நெடுநாளாய் சாந்த குணம்வாய்ந்து, பிறரால் பூஜிக்கப் பெற்று, கொம்பு குளம்புகளை உபயோகப் படுத்தாது, மாந்தர்களுடன் பழகிவந்தோம். இப்பொழுது நேர்ந்திருக்கும் அல்ப சங்கடத்தின் பொருட்டு, நமது இயற்கை நற்குணங்களை மாற்றிக்கொள்ளுவது யுக்தமல்ல. உலகத்தில் தெய்வம்போல விளங்கும் நாமே தீமை செய்யப் புகுந்தால், உலகத்தவர் என்னென்று இகழார்? ஆகிலும், மாந்தர்கள், செல்வத்திலுள்ள ஆசைபற்றி, நம்மை கவனிக்காது கைவிட்டார்கள். அவர்களுக்கு மறுபடியும் கவனம் உண்டாகும்படி நாம் செய்யக்கூடுமாயின், அது மிக்க நலத்தைத் தருவதாகும். ஆசைக் கடலுள் ஆழ்ந்து கிடக்கும் அவர்களைக் கரையேற்றுவது அசாத்தியமாகுமோ வெனவும் என் மனமேங்குகின்றது. அவர்களுடன் இவ்வளவுகாலம் பழகி, இப்பொழுது விட்டுப்பிரிந்து நாம் தனியே செல்வதென்றால் மனம் துணியவில்லை. அதன்றியும் நெடுங்காலமாக அவர்களால் இரக்ஷிக்கப்பட்டு வந்த நாம் இப்பொழுது கானடைந்தால், முன்போல துஷ்டமிருகங்களைத் தடுக்கும் சக்தி வருமோ, வராதோ வென்ற பயமுண்டாகின்றது. இவைகளை யெல்லாம் ஆலோசிக்குமளவில், நாம் வளைவுகொம்பர் சொல்லியபடி செய்வது தகாதென்று எண்ணுகிறேன். நமக்கு உணவு குறைவு பட்ட காலத்திலெல்லாம், நாம் பெருங்குரலெடுத்துக் கதறினால், நமது காவலாளர்களும், உடையவர்களும், கத்தலைப் பொறுக்காமல், நம்முடைய குறைகளைத் தீர்த்து விடுவார்கள். இதுவே தகுந்த உபாயமெனை நினைக்கிறேன்," என்று மொழிந்து ஓய்ந்தது.

பிறகு, கொம்புகள் வெளிப்பட்டதும் படாததுமாயிருந்ததோர் இளங்கன்று, அதிகம்பீரமாக எழுந்து, கத்த ஆரம்பித்தது.

இளங்கோம்பன்:—"பெரியோர்களே! இதுவரையிலும், வயதிலும் அறிவிலும் 'முதிர்ச்சி

யடைந்த வளைவு கொம்பரும், குச்சிக்கொம்பரும் சொல்லிய விஷயங்களைக் கேட்ட உங்களுக்கு, புல்லரிவோடுகூடிய நான் யோசனைகள் சொல்லப் புகுவது தகாது. ஆனாலும் ஏதோ எனக்குத் தோன்றும் சில விஷயங்களைத் தெரியப்படுத்திக் கொள்வதினால், அவர்கள் சொன்னதை நிராகரித்ததாக ஆகாதென்றெண்ணி, இப்போது எனதபிப்பிராயத்தை எடுத்துக்கூறத் துணிந்தேன். குச்சிக்கொம்பர் சொல்லியபடி, கொம்பு குளம்புகளை உபயோகப்படுத்துவது நமது சுபாவத்திற்கும் பெருந்தன்மைக்கும் அழகல்லவென்பது சித்தம் தான். ஆனால் அவர் சொல்லியபடி நாம் கத்துவதினாலேயே நமது கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ளலாமென்பது என் மனதிற்கு இசையவில்லை. ஏனெனில் இப்பொழுது உடையவர்களும், காவலாளர்களும் செய்துகொண்டிருக்கின்ற பிரிவினையினால், நமது கத்தலை யார் கவனிப்பதென்பதே சந்தேகத்தில் வந்துவிட்டது. உடையவர்கள் தங்களுக்குப் பால்கொள்வது கடனேயொழிய, மற்றையதெல்லாம் காவலாளர்கள் கடமையென்கிறார்கள். காவலாளர்களோவென்றால், தங்களுக்குக் கிடைக்கும் எருவினாலும் நீரினாலும் தக்க உணவு வாங்கப் பணம் கிடைப்பதில்லையென்று முறையிடுகின்றனர். இந்நிலைமையில் நாம் கத்துவதினால் பயன் உளதோவெனப் பெரியோர்களே ஆலோசிக்க வேண்டும். அதிகமாகக் கத்துவதால் அவர்களுக்குக் கோபத்தை யுண்டாக்கித், தடியடிக்கும் ஆளாவதல்லாது, வேறு கதியுண்டோ,—சொல்லுங்கள்! இது இவ்வாறாக, எனக்குத் தோன்றும் உபாயமொன்று இருக்கின்றது. அதைப் பரிசோதித்து உசிதம்போல் செய்யலாம். நமக்குக் கடவுளளித்த சக்திகளில், உணவுக்குத்தக்க பால் சுரக்கும் தன்மையும், பாலை யடக்கிக் கன்றுகளுக்குக் கொடுக்கும் தன்மையும் உள்ளன. அவைகளை உபயோகிப்பதினால், உடையவர்களையும், காவலாளர்களையும் நம்மை கவனிக்கும்படி செய்துவிடலாம். நாம் அதிகமாகப் பால் சுரப்பதற்காகவேண்டியல்லவா அதிகத்தீனியைத்தின்கிறோம்? கன்றுகளுக்கு வேண்டிய அளவு பால் சுரக்கப்போதுமான உணவை மாத்திரம் அருந்தி, பால் பெருக்கை நிறுத்திவிட்டால், காவலாளர்களும் உடையவர்களும் நம்மை வைத்து வளர்ப்பதில் பயனில்லையென அறிந்து, நம்மைக்காட்டிற் கோட்டிவிடுவார்கள். அல்லது, உணவை அதிக சிரத்தையுடன் வைப்பார்கள். அவர்கள் நமது உணவைச் சுருக்கியது நமக்கு நன்மையையே விளைவிக்குமென்பது என் எண்ணம். அவ்வழியையே நாமும் தொடர்ந்து, நாமாகவே உண்டியைக் குறுக்கிக் கொண்டால், நமதெண்ணம் நிறைவேறும். இது, முதலில் நம்முள் சிலருக்குக் கஷ்டமாயிருப்பினும், அதை எல்லோருடைய நன்மையின்பொருட்டு ப்பொறுத்துக்கொண்டால், முடிவில் நலமடையலாமென்பதைத் தெரிவித்துக்கொண்டேன். தாங்கள் திருவுள்ளத்திற்கிசைந்தபடி செய்யலாம்," என்று சொல்லித் தலைகுனிந்து நின்றது.

உடனே காவலாளர்கள் வந்து, மாடுகளை ஓட்டி ஊருக்குச்சென்றார்கள். நானும் ஆவின் அறிவைக்கண்டு, ஆச்சரியமடைந்து, வீட்டுக்கேகினேன்.

—"ராமசந்திரர்."

இராமபத்ரன

(ஸ்ரீமான் Y. மகாலிங்க சாஸ்திரி, B.A., B.L., எழுதியது)

இராமபத்ரன் எளிய குடும்பத்தில் உதித்தவனாயினும், படிப்பில் சூரன். அவனுக்கு உபநயனமானது முதற்கொண்டு, பெண்ணைப் பெற்றவர்கள் வரன் தேடிச் செய்த பிரயத்தனங்களில் இவனையே முதல் பக்ஷமாகக் கருதிவந்தார்கள். படிப்படியாய் இவன் பரீக்ஷைகளில் தேறத் தேற, இவனுடைய தகப்பனார் கையில் அடுக்கடுக்காய் ஜாதகங்கள் குவிந்தன. ஆதியில் முத்துவையர் தன் பிள்ளைக்கு தன் மைத்துனன் பெண்ணையே விவாகம் செய்வதாய் பிரஸ்தாபித்திருந்தார். அந்தப்பெண் பிறந்ததும் அவள் தாயார் அறையிலேயே இராமபத்ரனுக்கே கொடுப்பதென்று நிச்சயித்து, சீதாலக்ஷ்மி என்று பெயர்வைத்தழைத்தாள். அந்தக்காலம் நாத்தனாருக்கும் மன்னிக்கும் அந்தஸ்து சமமாயிருந்ததால், ஏழைக்கு ஏழை மனப் பொருத்தமாயிருந்தது. இப்போதோ காலம் மாறிவிட்டது. இராமபத்ரனுக்குப் பலவக்கீல்களும் பல உத்தியோகஸ்தர்களும் பெண்ணைவைத்துக் கொண்டு காத்திருந்தார்கள். முத்துவையருக்கு அவன் வக்கீலாகி, ஆயிரக்கணக்காக சம்பாதித்துக் குவிக்கவேண்டுமென்று ஆசை. அதற்கு அநுகுணமாய் பட்டணத்து வக்கீல் ஒருவரிடம் ஸம்பந்தம் செய்வதென்று தீர்மானித்திருந்தார். ஏழை மாமா இப்போது கிட்ட நெருங்கக்கூட முடியவில்லை. இராமபத்ரனும் ஸீதாவின் புகழத்தக்க குணங்களை நேரில் அறிந்தவனாயிருந்தும், தன் பிற்கால அந்தஸ்து உயர்வை முக்கியமாகக் கருதி ஒரு செல்வாக்குள்ள லௌகிகப் பிரபுவுக்கு மாப்பிள்ளையாக வேண்டுமென்ற ஆவலை மூட்டிவந்தான். இவன் "லிட்ரசர் ஆனர்ஸ்" படிக்கும்போதே வக்கீல் மாமனாராகிய கப்பலொன்றை ஸம்பாதித்துக்கொண்டு, பிறகு "லா" என்ற சமுத்திரத்தில் இறங்கவேண்டுமென்று மனோரதம் கொண்டிருந்தான். ஆனால் அவனிஷ்டப்படி தகுந்த ஜாதகங்கள் வரத்தாமதித்ததால், முதலில் கைபலத்தை நம்பி இறங்குவோம், வழியில் படகு கிடைத்தால் பற்றிக்கொள்ளுவோம், என்று துணிந்து "லா" காலேஜில் சேர்ந்து விட்டான்.

லாகாலேஜ் என்றால் இலகுவில்லை. படிப்பின் சிரமத்தைப்பற்றி நான் பேசவில்லை. தேறுவதும் தேறாததும் அநேகமாய்ச் சீட்டுகுலுக்கி எடுப்பது போலிருக்கிறது. ஒரு பையனை இரண்டு மூன்று வருடங்கள் பட்டணத்தில் படிக்க வைத்துவிட்டு, மாதம் ஐம்பதுரூபாய் வீதம் காலக்ஷேபத்திற்கும் போக வர ரயில்ச் சிலவுகளுக்கும் சட்டைத்துணிகளுக்கும் புஸ்தகங்களுக்கும் திடீர் திடீர் என்று மணியார்டர் செய்தவர்களுக்குத் தெரியும் அந்த வருத்தம். முத்துவையர் தன் பையன் ஒரு பாஷ்யமய்யங்காராக ஆகவேண்டுமென்ற ஆசையினால் பணத்தை எப்படியாவது ஆகப்படுத்தி அனுப்பி வந்தார்.

இராமபத்ரன் லாகாலேஜில் பிரவேசித்ததும், ஏற்கனவே இவனை வரனாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஒரு படி மேற்பட்ட பெண், பெற்றோர்கள் கண்ணுக்குப், புலப்படலாயினாள். ரூபாய் இரண்டாயிரத்துக்கு மேல் கொடுக்க சக்தியில்லாதவர்கள் அவனைப்பற்றி இப்போது ஸ்வப்னத்திலும் நினைக்க ஹேதுவில்லை. ஐயாயிரம் வரையில் முத்துவையருக்கு உத்தேசமிருப்பதாய் ஊரெங்கும் பிரஸ்தாபங்கள் உலாவின. யானைக்குத் தீனிபோட யாராலாகுமென்று நடுத்தரச் செல்வவந்தர்கள் ஜாதகம் கேட்பதில் கூட உத்

சாக மற்றவரானார்கள். "பெரிய மிராசுதார்களுக்கு இத்தொகை இலக்ஷியமில்லையே; இத்தகைய யோக்யதை பெற்ற நமது இராமபத்ரனுக்குப்பெண்ணைக் கொடுக்க அவர்கள் ஒருவரும் முன் வரவில்லையா" என்று நீங்கள் கேட்கலாம். இந்த விடத்தில் மிராசுதார்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்குமிருக்குமோர் வித்தியாசத்தை எடுத்துரைக்க நாம் எத்தனித்தால், நீங்கள் கொஞ்சம் மன்னிக்கவேண்டும். மிராசுதார்கள் அநேகமாய்ப் படிப்பை மட்டும் நம்புவது மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதுபோல் என்ற கொள்கையுள்ளவர்கள். "பி. ஏ.,"க்களும் "பி.எல்."களும் விருத்தியகப்படாமலோ, அல்லது கீழ்ப்பட்ட சம்பளத்திற்கோ, சிரமப்பட்டுக் கொண்டிருப்பதை அவர்கள் நூற்றுக் கணக்காய் உதாகரிப்பார்கள். புல்லுள்ள தரையில் பெண்ணைக்கொடுக்க வேண்டியதென்பது அவர்களுடைய பொதுவான வார்த்தை. அதிலும் முத்துவையர் ஜாமீன்துகையை ஏற்றிவிட்டதால், மிராசுதார்கள் இராமபத்ரன் விஷயத்தில் பரபரப்படையவில்லை. லௌகீக சீமான்களோ, ஆங்கில படிப்பையும், அந்தஸ்து உயர்வையுமே முக்கியமாகக் கருதுவார்கள். படிப்பை மட்டும் நம்பி "பிரஸிடென்ஸி" முதல் பையனுக்கு மாதம் ஆயிரக்கணக்காய் சம்பாதிக்கும் வக்கீல் ஒருவர் துணிந்து பெண்ணைக்கொடுத்து விடுவார். தமக்கு எப்படி அந்தப் படிப்பானது உயர்வுக்குக்காரணமோ அதுபோலவே பிறருக்குமென்பது அவர்களது நம்பிக்கை. மேலும், ஆங்கிலப்படிப்பு இல்லாவிட்டால், தங்களுடன் ஸமதையாய் சம்பந்தம் செய்ய யோக்யதை வராதென்று அவர்கள் எண்ணுவார்கள். இவ்வகுப்பினரைத் தான் இராமபத்ரனும் எதிர்பார்த்திருந்தான்.

3.

அந்த வருடம் "எப்.எல்." பரீக்ஷையில் முதலில் தேறி, இராமபத்ரனுக்கு ஸ்காலர்ஷிப்பும் கிடைத்தது. பட்டணத்தில் பிரதான வக்கீலான லக்ஷ்மீபுரம், ஸ்ரீபதி அய்யர், பஞ்சரத்னங்கள் போன்ற தன் ஐந்து குமாரிகளில் கடைசிப் பெண்ணையுத்தேசித்து, இராமபத்ரனுடைய ஜாதகத்தைக் கேட்கப் போவதாய் ஒரு வதந்தி பரவிற்று. இராமபத்ரனுக்கு அந்த சமயம் தகப்பனாரிடமிருந்து ஐம்பது ரூபாய்க்கு எழுதினால், நூறு ரூபாய் 'மணியார்டர்' வந்துகொண்டிருந்தது. இராமபத்ரன் சிநேகிதர்கள் மத்தியிலும், "கிளப்களிலும்," பீச்சுக்கரையிலும், அருமையான 'ஸில்க்' உடுப்புகள் தரித்துக்கொண்டு 'ரிஸ்ட் வாட்சு'டன் காணப்பட்டான். முகக்ஷவரம் ஆரம்பித்ததும் கிட்டத்தட்ட இந்த சந்தர்ப்பத்தில்தான். கொஞ்சநாளாய் முத்துவையரும் தன் குக்கிராமத்தைவிட்டு தபாலாபீஸ் சமீபமாயிருக்கும் ஒரு ஊரில் வசித்து வந்தார்.

4

சித்திரை பிறந்ததும் 'பி.எல்.' பரீக்ஷை நடந்தேறியது. வழக்கம்போல் இராமபத்ரன் நன்றாய் எழுதியிருந்தான். பரீக்ஷைக்குப்பிறகு அவன் ஒரு வாரத்திற்குமேல் பட்டணத்தில் தாமதித்தான். அப்போது அவன் கையிலேயே ஜாதகம் இருந்தது. பிறகு ஊருக்கு வந்ததும் தன் சிநேகிதன் ஒருவன் தன்னைத் திருக்குற்றாலத்திற்கு, "ஸம்ஸனு"க்குச அழைத்திருப்பதாகவும், அவசியமானால் "லெட்டர்" கண்டவுடன் திரும்பி வருவதாகவும் சொல்லி தகப்பனாரிடம் விடைபெற்றுக்கொண்டு, திருநெல்வேலிக்குப் புறப்பட்டுப்போய்விட்டான்.

பரீக்ஷை விஷயம் திருநெல்வேலியிலேயே, இராமபத்ரனுக்குத் தெரியவந்தது. அவன் பிரஸி "டென்ஸி ராங்கு" கிடைக்குமென்று நிச்சயமாய் நம்பியிருந்தான். மூன்றாம் "கிளாஸில்" தேறினது அவனுக்கு மிக்க ஏமாற்றத்தைக் கொடுத்தது.

5.

"ரிஸல்ட்" தெரிந்த மறுநாள் பிற்பகலில், இராமபத்ரன் தன் தகப்பனாரிடமிருந்து வந்த "கவர்" ஒன்றைப்பிரித்து வாசித்துக் கொண்டிருக்கும் போது, வீதியில் ஒரு "கோச்சு" வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கித் தன் பெயரை விசாரித்துக்கொண்டுவந்த கனவானை இராமபத்ரன், உடனே, தான் கடிதத்தில் கண்ட வக்கீல் இராமையர் என்றும், பெண் பார்ப்பதற்காகத் தன்னை அழைத்துப்போக வந்திருக்கிறாரென்றும் ஊகித்துவிட்டான். இருந்தாலும் வந்தவரை யணுகி வந்தனம் சொல்லி, "நான்தான் இராமபத்ரன். தாங்கள் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா," என்று ஆங்கிலத்தில் மரியாதையாய் மொழிந்தான். இராமையர் அவனுடைய ஆகிருதி, இங்கிதம், முதலியவைகளால் மனதிற்குள் மிகுந்த திருப்தி அடைந்தவராய், முத்துவையர் தனக்கு எழுதிய "லெட்டரைப்" பிரஸ்தாபித்துவிட்டு, அவனை "டிபனு"க்குத் தன்னுடன் வீட்டுக்கு வரும்படி அழைத்தார். இராமபத்ரனும் அவர் நிர்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு, அன்றிரவே "மெயிலில்" புறப்பட்டு வரவேண்டுமென்று தகப்பனார் எழுதியிருப்பதாக முன்னறிக்கை செய்துவிட்டு, "கோச்சு" வண்டியில் ஏறினான்.

நம் குடும்பங்களில் விவாகத்திற்கு இருக்கும் பிள்ளைகள் சங்கோசிகள். அதிலும் முதல் முதல் பெண்பார்க்கப்போன விடத்தில், லஜ்ஜை திரையாய் முன்வந்து நிற்கும். நேரில் பெண்ணை சரிவரப்பார்க்காமல் எல்லாவற்றிற்கும் தலையாட்டிவிட்டு, ஊருக்குவந்தபின் பெண்ணைப்பற்றின விபரங்களைத் தன்னோடுகூட வந்தவர்களல்லவா கவனித்திருக்கவேண்டும் என்று தாய்முன் சீறுவது வழக்கம். ஆனால் இராமபத்ரன் பலமுறைப் பெண்பார்த்துத்தெளிந்தவன். தான் நேரில் காணும்போது, தீர ஆராய்ச்சி செய்யாமல், பிறர் பேச்சுக் கேழ்ப்பது முட்டாள்த்தனம் என்பதை அவன் அறிந்தவன்; என்றும் துணையான தன்னுயிர்த்தோழியைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த தீர்க்காலோசனையையும் பகுத்தறிவையும் தான் உபயோகிக்க வேண்டுமென்றும், பிறர் போதனையினாலாவது, அவசரப்பட்டுக் கொண்டாவது, பச்சாத்தாபப் படத்தக்க ஒரு தீர்மானத்திலிறங்கி விடலாகாதென்று அவன் நிச்சயித்திருந்தான்.

6

இராமையர் தகுந்த கனவானென்றால், அவர் இராமபத்ரனை அன்று பிற்பகல் உபசரித்த வகைகளை அதிகம் விஸ்தரிப்ப தவசியமில்லை. ஹாலில், பிதாவுக்குப் பக்கத்தில் ஸோபாவை அலங்கரிக்கும் இராமபத்ரனுக்குக் கல்யாணியே சிற்றுண்டி, தாம்பூலம் முதலியவை கொண்டுவந்து வைத்தனள். இராமபத்ரன் வாதாம் ஹல்வாவில் கொஞ்சம் எடுத்து ருசிபார்க்கும்போது, இராமையர் அது குழந்தை கல்யாணியால் தயார் செய்யப்பட்டது என்று சொல்லப்போகிறவர்போல் காணப்பட்டார். யதேச்சையாலோ, அல்லது முன் ஏற்பாட்டினாலோ கல்யாணியின் சங்கீத உபாத்தியாயர் அச்சமயம் பிரவேசித்தார். இராமையர் அவர் வரவில் தன் சந்தோஷத்தைத் தெரிவித்துவிட்டு, அப்பியஸிக்கப்பட்ட கீர்த்தனைகளை முதலில் ஒருதரம் திருப்பும்படி அவருக்கு அறிவித்

தார். உபாத்தியாயர் ஆகட்டும் என்று கல்யாணியைக் கூப்பிட்டுக்கொண்டு தாழ்வாரத்திற்குச் சென்றார். இராமபத்ரனுடைய கர்ணேந்திரியமும் அவர்பின் உள்ளே சென்றது. பிறகு அவன் இராமையர் 'பேபர்' விஷயமாய்ச்செய்த சல்லாபங்களுக்கும், 'யுனிவர்ஸிடி' சம்பந்தமாய்க்கேட்ட வரலாறுகளுக்கும் ஒரேரீதியாய் ஹூம்காரம் கொடுத்துப் புன்னகையுடன் தலையசைத்து வந்தான். எதிலும் லயிக்காத மனம் சங்கீதத்தில் லயிக்குமல்லவா ?

கல்யாணியின் குரலும் காதில் தேன் ஒழுகுவதுபோல் வெகு இனிமையா யிருந்தது. இராமபத்ரன் வெகுநேரம் வரையில் கடிகாரத்தைப் பார்க்கவில்லை. இனிமையான ஸங்கீதமும், அருமையான கவிதையும், இசைந்த நாயகியின் ஸல்லாபமும் காலம் செல்வதை மறக்கடிக்க வல்லவையல்லவா?

மணி ஐந்தடித்தது. இராமபத்ரன் பரபரப்புடன் ஏழு மணிக்கு ரயிலாயிற்றே, நான் தயார் செய்து கொள்கிறேன் என்றெழுந்தான். இராமையர் அவனை யனுப்புவதற்குரிய ஸம்பிரமங்களைத் துவக்கினார். பெண்ணுக்கு வயது பதினொன்றாகிவிட்டபடியால் ஆனி முடிவுக்குள் கல்யாணஞ் செய்ய வேண்டியது அவசியமாக விருந்தது, ஆகையால் கல்யாணக் காரியங்கள் எந்த அவசரத்திற்கும் தயாராகச் செய்து வைக்கப்பட்டிருந்தன. இராமபத்ரனின் மனோ பாவத்தைத் தெரிந்து கொண்டு தானும் அவனுடன் ரயிலேறி அவனுடைய தகப்பனாரிடம் லௌகிக விஷயங்களில் கலந்துகொண்டு முகூர்த்தத்தைச் சீக்கிரம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இராமையருடைய த்வரை. அவர் "ஸ்டேஷனு"க்கு வந்து டிகட் வாங்கி அவனை வண்டியிலேற்றும் வரை தானும் புறப்படத் தயாராகத்தானிருந்தார். இராமபத்ரனோ தன் இங்கிதங்களை வெளிப்படுத்தாமல் வண்டியிலேறும்போது எல்லாவிஷயங்களுக்கும் ஊருக்குப்போய் எழுதுவதாய்ச் சொல்லி அவருக்கு விடை கொடுத்து விட்டான்.

7

இராமபத்ரன் "ஸெகிண்ட் கிளாஸ்" வண்டியில் தனியே இருந்தான். இரவு செல்லச்செல்ல நிலவு தெளிந்து வீசியது. இராமபத்ரன் சந்திரனைப் பார்த்தான். சிந்தையிலாழ்ந்தான். "கல்யாணியின் முகம் மலர்ச்சியுள்ளதுதான். வாசற்படியண்டை வரும்போது என்னைக் கடைக்கண்ணால் பார்த்தாள். பிறகு தலை நிமிரவில்லை. வயது பதினொலாகிவிட்டதே. இராமையரும் "ஸோஷல் ரிபார்மில்" பிரியமுள்ளவரென்று காதில் விழுகிறது. பிதாவுக்கு இந்த விபரம் தெரியவந்தால் இந்தசம்பந்தத்தை சிலாகிக்கமாட்டார். இருந்தாலும் என்னிஷ்டம்போல் விட்டுவிட அவர் சித்தமாயிருக்கிறார். ஆனால் எனக்குச் சம்மதம்தானா ? பெண் கொஞ்சம் துணிச்சலாயிருக்குமென்று நினைக்கிறேன். கையில் பட்டை வளையலோவென்று நான் சந்தேகித்தது "ரிஸ்டு வாட்சா" க விருக்கவேண்டுமென்று இப்போது புலப்படுகிறது. அம்மாவுக்கு மணி சொன்னால் போதுமோ? காரியம் செய்யவேண்டுமே. இருக்கட்டும். கடிதத்தில் இன்னும் பல ஜாதகங்கள் வந்திருப்பதாய் எழுதியிருக்கிறார். தாம்பூலங்களைப் பார்த்துக்கொண்டு யோசித்துச் செய்யவேண்டும் ;' இந்த உறுதியுடன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

வீட்டிலும் யோசனைகள் பிரபலமாயிருந்தன. தை பிறந்தது முதல் யோசனைகளுக்குக் கங்கும் இல்லை, கரையுமில்லை. இராமையர் முடைக்கும் இவர்கள் யோசனைக்கும் பொருந்தவில்லை. அவர் இரண்டுவாரம் காத்திருந்து பிறகு இவர்களை அபேக்ஷிக்காமல் தன் காரியத்தைத் தானே முடித்துக் கொண்டார்.

ஆனி முப்பதும் ஆலோசனைகளிலும், பெண் பார்ப்பதிலும், ஜாபின் தகரார்களிலும் கடந்துவிட்டது. பழையபடி இராமபத்ரன் "அப்ரண்டிஸா"க இருப்பதற்கு, நல்ல வேலை பார்த்துக்கொண்டு பட்டணம் போய்ச் சேர்ந்தான். அந்த வருடத்தில் அவனுக்கு ஜன்மத்தில் குருவும் சனியும் இருந்தார்போலும்.

8

கிரமமாக இராமபத்ரன் "ஹைகோர்ட்"வக்கீலாகி ஸன்னத்து பெற்றான். பல மாதங்களாயின; ஒன்றும் விசேஷமில்லை.

எம்பிஎம்பிக் குதித்துப் பெருஞ்சப்தம் செய்யும் அலைத்திரள்களின் நடுவே ஓர் நீர்த்துளிபோன்ற இராமபத்ரன் இருந்தவிடம் தெரியவில்லை. இருபது வருடம் விழுந்து விழுந்து வாசித்துப் படிப்படியாய் ஏறிக்கடைசியாகச் சிகரத்தை எட்டிப் பிடித்தானே, அங்கு விதம் விதமாய் பல விருக்ஷங்கள் இருக்குமென்றல்லவா அவன் நம்பி யிருந்தான். இப்படிப் பனிக்கட்டியில் கிடந்து விரைக்க வேண்டுமென்று தெரிந்திருந்தால் அவன் இந்தவழி வந்திருக்கமாட்டான். இவனைப்படிக்க வைத்ததில் பிதாவுக்குக்கடந்தான் மிஞ்சியது. ஐயோ பாவம்! இராமபத்ரனை அர்த்தம் காமம் என்ற இரண்டு புருஷார்த்தங்களும் பலத்தைக்கொடுக்க வேண்டிய சமயத்தில் வஞ்சித்துவிட்டன. அது என்ன மாயமோ! இராமபத்ரன் ஒரு தகுந்த வரன் என்பதை வெகுப் பேர் மறந்து விட்டனர். இப்போது தை பிறப்பதற்கும் ஆடிபிறப்பதற்கும் அதிகபேதமில்லை. கானலை நீர்ப்பெருக்கென்று தொடர்ந்து வந்த மான்கள் அது பின்னே பின்னே விலகக்கண்டு சலிப்புற்று நடுவழியிலுள்ள குளம் குட்டைகளில் தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொண்டன. இராமபத்ரன் உயரஉயர தங்களுடைய கழுத்தொடியுமட்டும் அவனை நிமிர்ந்து பார்க்க ஒருவரும் தயாராகயில்லை. மேலும் நம்முடைய ஸமாஜங்களில் பெண்களுக்கு அநேகமாய் பன்னிரண்டு வயதுக்குள் விவாகம் செய்வதால், பதினாறுமுதல் இருபது வயதுள்ள வரனைத்தான் விரும்புவது வழக்கம். பிரதம விவாகங்களில் அநேகமாய் எட்டுவயதிற்கும் மேல் வித்யாசமிராது. இந்த திட்டப்படி இராமபத்ரனுக்கீடான கந்நிகைகளுக்கு கல்லியாணமாகி இரண்டு வருஷங்களுக்குமேலாகிவிட்டது. தவிரவும் காதைத்தில் விவாகமாகாவிட்டால்பொல்லாவுலகம் பலகாரணங்களைக்கல்பிக்கும். அதை நாம் விஸ்தரிக்கத்துணியவில்லை. அவ்வுக்கு மிஞ்சிக்காலை அகட்டிவைத்து விட்டோமென்று இராமபத்ரனுக்கு இப்பொழுது புலப்பட்டது. தன்னைப்பார்த்து நண்பர்களைப்பார்க்கவும் வெட்கினான்; அவன் சரீரம் வாட்டமடைந்தது. தென்னையும்பனையும் வளர்ந்ததுபோல் படிப்பில் உயர்ந்து பயனென்ன? ஒரு மிருதுவான பூங்கொடிசுற்றும் பாக்கியத்தை நான் பெறவில்லையே என்று அவன் ஏங்கினான். ஆகா! வஸந்தகாலத்தில் தன்னையலங்கரித்துக் கொள்ளாமல் பனிக்காலத்தில் பூந்தோட்டத்தைத் தேடிவந்தால் போல. கொஞ்ச நாளில் விவாஹத்தைப்பற்றின அவன் கொள்கைகள் மாறின. போனவாரத்தில் "சாரன்" என்ற சமாசாரப்பத்திரிகை பின் வருமாறு விளம்பரத்தை வெளியிட்டது:—

"M. A., B. L. பட்டம் பெற்ற 25வயதுள்ள ஒரு ஸ்மார்த்த பிராம்மணனுக்கு விவாகஞ்செய்து கொள்ள 18வயதுக்கு மேற்படாத் ரூபவதியான ஒரு பாலவிதவை தேவை. விபரங்களை "சாரன்" பத்ராதிபருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்." இந்த அறிக்கை இராமபத்ரனுடையதுதானா வென்று சந்தேகிப்பவர் மேற்கண்ட விலாஸத்திற்கு எழுதி நிர்ணயித்துக் கொள்ளலாம்.

புயற் காற்று

ஸர் ரவீந்திரநாத் டாக்கூர் இயற்றிய "ரெக்" என்னும் கதையின் மொழிப்பெயர்ப்பு.

(இராமேசனுக்கும் அந்நதபாபுவின் குமாரியான ஹேமநளினிக்கும் உள்ள காதல் இராமேசனுக்குப் போட்டியாயிருந்த அக்ஷயன் பாடிய பாடல்களால் வெளியானதும் பிறகு அவன் "ஆர்மோனியம்" கற்க முயன்றதும் சென்ற சஞ்சிகையில் சொல்லப்பட்ட சதை)

ஆங்கிலேயருக்கு "கிருஸ்ட்மஸை"ப்போல் வங்காளிக்கு "பூஜா" விடுமுறை நாட்கள்; அந்த பத்து நாட்களும் எல்லா வேலையையும் நிறுத்திவிட்டு பந்துக்கள் எல்லாரும் உத்சாகமாய் ஒன்று சேருவார்கள். அப்போது விடுமுறைக்காலமென்று ரயில் வண்டிக்காரர்கள் வாடகையைக் குறைத்து வாங்குவதால் வருஷாவருஷம் அந்நத பாபுவும் ஹேமநளினியும் ஜப்பல்பூருக்குப் போய் வருவது வழக்கம். அந்நத பாபுவின் மைத்துனர் அங்கே சர்க்கார் உத்தியோகத்தில் இருந்தார். அவ்விடத்திற்கு வருஷந்தோறும் போய் வருவது தன் வயிற்று நோய்க்கு நல்லது என்பது அந்நத பாபுவின் கொள்கை.

இப்போது ஸெப்டம்பர் மாதமானதால் விடுமுறை நாட்கள் சமீபித்தன. அந்நத பாபு பிரயாணத்திற்கு தயார்செய்ய ஆரம்பித்துவிட்டார். அதனால் ஹேமநளினியும் இராமேசனுக்கு ஆர்மோனியம்" சொல்லிக்கொடுக்கும்போது அடிக்கடி எழுந்துபோக நேரிடவே இராமேசன் கிடைத்த போதை வீணாக்காமல் அவளுடனே இருந்து படிக்கவேண்டி இருந்தது.

ஒருநாள் சம்பாஷணைமத்தியில் திடீரென ஹேமநளினி: "இராமேசபாபு, வெளியூருக்குப் போய்வந்தால் உம்முடைய உடம்புக்கும் நன்மை உண்டாகும்; கல்கத்தாவைவிட்டு எங்கேயாவது சற்று வெளியே போனாலும் போதும்; என்ன, அப்பா, நான் சொல்வது சரிதானே" என்று சொன்னாள்; இராமேசன் தன் தகப்பனை இழந்து துக்கப்பட்டிருந்தால் வெளியூர்க் காற்றுப் பட்டால் அவன் மனதுக்கு ஆறுதல் உண்டாகலாம் என்று அந்நத பாபுவும் ஹேமநளினியின் பேச்சை அங்கீகரித்தவராய் "ஆமாம், அது நல்ல யோசனைதான். கொஞ்சநாள் வெளியூருக்குப்போய் வருவது மிகவும் நலம்; ஆனால் இதைக் கவனித்திருக்கிறாயா, இராமேசா, நாட்டுப்புறத்திற்கோ அல்லது வேறு இடத்திற்கோ எங்கே போனாலும் சரி; முதலில் கொஞ்ச நாள்தான் உடம்புக்கு குணம் உண்டாகிறது; எழு எட்டுநாள் நன்றாய் பசிக்கிறது; வயிறார சாப்பிட முடிகிறது; அப்புறம் பழையபடி வயிறு உப்புவதும் எரிச்சல் உண்டாவதும் என்ன சாப்பிட்டாலும்——"

ஹேமநளினி: "நர்மதா நதியை பார்த்திருக்கிறா, இராமேசபாபு?"

இராமேசன்: "இல்லை; பார்த்ததேயில்லை"

ஹேமநளினி: "நீர் அவசியம் பார்க்கவேண்டிய இடம் அது; இல்லையா, அப்பா?"

அந்நதபாபு: "ஆமாம்; (பிறகு, திடீரென) இந்தா, இராமேச பாபுவும் என் நம்முடன் வரக்கூடாது? வெளியூருக்குப் போனால் போலிருக்கும்; நர்மதையும் பார்த்ததாயிருக்கும்."

வெளியூர்ப்போவது நர்மதாதரிசனம் ஆகிய, இரண்டும் இராமேசனுடைய மனக்கிலேசத்தைப் போக்கடிப்பதற்கு அவசியம் என்று தீர்மானிக்கப் பட்டபோது இராமேசன் ஆக்ஷேபிக்கவில்லை.

அன்று முழுவதும் காற்றின் மேல் நடப்பதுபோல் இருந்தது அவனுக்கு; தன் மனக்கிளர்ச்சியை ஒருவாறு சாந்தம் செய்ய யத்தனித்து வீட்டிற்கு வந்தவுடன் கதவைமுடிவிட்டு "ஆர்மோனியம்" வாசிக்க ஆரம்பித்தான்; ஆனால் அவன்மனது கட்டுக்கு அடங்காமல் பொங்கியெழுந்ததால் அவன் கைவிரல்கள் வெறியுண்டவைபோல் "ஆர்மோனிய"க்கட்டைகள் மீது மேலுங்கீழுமாய் புரண்டோடின, பாட்டுடன் அபஸ்வரம் கலந்து ஒலித்தது. ஹேமநளினியைவிட்டு ச்சீக்கிரத்தில்பிரிய வேண்டிவருமே என்று அவன் மனம் தாழ்ந்து ஏங்கி இருந்ததுபோய், இப்போது ஏற்பட்ட சந்தோஷ வெள்ளமானது அவன் கஷ்டப்பட்டுப் படித்த படிப்பையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டது.

அப்போது பாட்டு முழக்கம் தடைபடும்படி யாரோ கதவைத்தட்டி "நிறுத்து, நிறுத்து, இராமேசபாபு, இதென்ன, இது" என்றதும் இராமேசன் முகம் வெட்கிச் சிவந்தது; கதவைத் திறந்தான். அக்ஷயன் உள்ளே நுழைந்துகொண்டே, "இராமேச பாபு, இப்படி சத்தம் செய்தால் பிறரைத் தொந்திரை செய்ததாக உம்மை உம்முடைய கோர்ட்டிலேயே கொண்டுபோய் நிறுத்திவிடுவார்களே!" என்றான்.

"ஆமாம், நான் குற்றவாளிதான்; ஒப்புக்கொள்ளுகிறேன்." என்றான் இராமேசன் புன்சிரிப்புடன்.

"அதிருக்கட்டும்! நான் உம்மிடம் கொஞ்சம் பேசவேண்டும், இராமேச பாபு, உமக்கு ஆக்ஷேபனை ஒன்றும் இல்லாவிட்டால்."

என்ன சொல்லுகிறானோ என்று இராமேசன் அக்ஷயன் மேல்ப்பேசுவதை எதிர் பார்த்து ஒன்றும் சொல்லாதிருந்தான். அப்போது அக்ஷயன் "ஹேமநளினியின் சுகதுக்கங்களில் எனக்குச் சற்றுக்க வலையுண்டு என்று உமக்கு இதற்குள் தெரிநதிருக்கலாமே?"

இதற்கு "ஆம்" "இல்லை" என்று பதில் சொல்லாமல் மேல் வார்த்தையை எதிர் பார்த்தவனாய் சும்மா இருந்தான் இராமேசன்.

"நான் அந்நத பாபுவின் சிநேகிதனானகையால் ஹேமநளினியின் விஷயமாய் நீர் என்ன அபிப்பிராயங்கொண்டிருக்கிறீர் என்று கேட்க அதிகாரமுண்டு எனக்கு" என்றான் அக்ஷயன். மறுபடியும்

இப்படி அக்ஷயன் கேட்டதும் அவன் கேட்ட குரலும் இராமேசனுடைய கோபத்தைக் கிளப்பின. ஆனால் சுரீர் என்று பதில்சொல்ல அவனுக்குத் திறனுமில்லை, இஷ்டமுமில்லை; சாந்தமாகவே "ஏன், நான்கெட்ட எண்ணம் கொண்டிருக்கிறேன் என்று சந்தேகிக்கும்படி இப்போது என்ன நடந்துவிட்டது" என்று கேட்டான்.

அக்ஷயன்: "இந்தாரும், இராமேசபாபு! நீர் ஒரு ஹிந்து; உம்முடைய தகப்பனாரும் ஹிந்து. நீர் எங்கே பிரம்ம ஸமாஜத்தில் கல்லியாணம் செய்துகொள்வீரோ என்று பயந்தன்றோ உம்முடைய தகப்பனார் உம்மை ஊருக்குக் கூட்டிக்கொண்டு போனார், அங்கே வேறு இடத்தில் உமக்குக் கல்லியாணம் செய்விக்கலாம் என்று; அது எனக்குத் தெரியாதோ?" அக்ஷயனுக்குத் தெரியும் என்பதில் சந்தேக முண்டோ! இது விஷயமாய் அந்தக்கிழவரிடம் ஜாடையாய் அறிவித்தது இவனேயல்லவா?

இராமேசனால் அக்ஷயனை முகமெடுத்துப் பார்க்க முடியவில்லை.

"உம்முடைய தகப்பனார் திடீரென்று இறந்துபோனதால் உம்மிஷ்டப்படி யெல்லாம் செய்யலாம்

என்று நினைக்கிறீரா, என்ன? அவர் அபிப்பிராயம்—''

இதற்குள் இராமேசன் பொருமையின் வரம்பைக்கடந்தவனுய் "அக்ஷயபாபு! வேறு எந்த விஷயமாய் வேண்டுமென்ருலும் எனக்கு புத்தி சொல்லும், கேட்கிறேன்; என் தகப்பனரைப் பற்றி மட்டும் நீர் பேசவேண்டிய அவசியமில்லே.''

"சரி, அப்படியானுல் அந்தப் பேச்சை விட்டு விடுகிறேன்; எனக்குத் தெரியவேண்டியதெல்லாம் இது ஒன்றுதான்; அதாவது, ஹேமநளினியைக் கல்யாணம் செய்துகொள்ள உமக்கு உத்தேசமுண்டா? அப்படி உம்மால் கல்யாணம் செய்துகொள்ள முடியுமா?''

இப்படி அக்ஷயன் மேன்மேலும் பாணம் தொடுத்தது இராமேசனுடைய சாந்த குணத்தையும் கலங்கச்செய்தது.

"அக்ஷயபாபு, நீர் அந்த பாபுவின் நண்பராயிருக்கலாம்; ஆனுலும்,இப்படியெல்லாம் என்னிடம் பேசும்படியாய் நீரும் நானும் அவ்வளவு நெருங்கிப் பழகவில்லே; ஆகையால் இந்தப் பேச்சை இதோடு நிறுத்தி விடும்''

அக்ஷயன் "நான் இந்தப் பேச்சை நிறுத்திவிட்டால் எல்லாம் ஒய்ந்து விடும், நீர் உமது இஷ்டப்படியெல்லாம் நடக்கலாம்; அதனுல் பிறருக்கு என்ன கெடுதல்கள் ஏற்படும் என்ற விசாரமே இல்லாமல் சுகமாய் இருக்கலாம் என்று நினையாதேயும். நீர் முன்பின் யோசியாமல் சிந்தையற்று இஷ்டப்படி நடந்து சுகமாய் திரிய முடியாது; உலகத்தார் உம்மை சும்மா விடமாட்டார்கள். உம்முடைய எண்ணங்கள் எல்லாம் உயர்ந்த எண்ணங்களாய் இருக்கலாம்; நீர் ஊரார் பேச்சைக் கவனியாதிருக்கலாம்; ஆனுல் ஹேமநளினி போன்ற பெண்கள் விஷயமாய் உம்முடைய நடத்தையைப்பற்றிக் கண்டிக்க அதிகாரம் உள்ளவர்களும்உண்டு என்று தெரிந்து கொள்ளும். ஏன் என்று கேட்டார் இல்லே என்று இராதேயும்; ஆனுல் பிறர் பெயரைச் சந்திக்கு இழுக்க வேண்டுமென்று உமக்கு அபிப்பிராயம் உண்டானுல் அதற்கு இதுதான் சரியானவழி; இப்படியே நடந்து கொள்ளும்.'' என்று சொல்லி முடித்தான் அக்ஷயன்.

இராமேசன்: (பொய் வணக்கத்துடன்)" இந்த உபதேச வாக்கியங்களுக்காக உமக்கு வந்தனங்கள் அளிக்கிறேன். காலக் கிரமத்தில் இந்த விஷயமாய் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அதன்படி நடந்து கொள்கிறேன். அதைப் பற்றி நீர் கவலேப்பட வேண்டியதில்லே. மேல்ப்பேச்சையும் இதோடு நிறுத்தி விடலாம்.''

அக்ஷயன்: "நிரம்ப சந்தோஷம், இராமேசபாபு, நீர் இந்த விஷயத்தில் ஒருதீர்மானத்திற்கு வரப்போகிறீர் என்று; தீர்மானப்படி நடப்பதாகச் சொன்னது என் மனக்கவலேயைத் ஒழிந்தது. எதுஎன்னவாயினும் இதைப் பற்றி இனி உம்மிடம் பேச எனக்கு இஷ்டமில்லே. நீர் பாட்டுப் படிப்பதற்கு இடையூருக வந்ததை மன்னித்து மறுபடியும் பாட ஆரம்பித்து விடும்; நான் போகிறேன்'' என்று வெளியே விரைந்து சென்ருன்.

ஆனுல் இராமேசனுக்கு பாட்டில் இருந்த ஸ்வாரஸ்யம் போய்விட்டது. தலேயைக் கையில் தாங்கிக் கொண்டு கீழேவிரித்திருந்த ஜமக்காளத்தின்மீது சாய்ந்து படுத்திருந்தான். பொழுதுபோனது கூடத் தெரியவில்லே. மணிஐந்து யடித்ததும் திடீரென் எழுந்திருந்தான். முடிவில் என்ன தீர்மானம் செய்தான் என்பது ஸ்வாமிக்குத் தான் தெரியும். ஆயினும் உடனே புறப்பட்டுப் போய் அண்ணடை வீட்டில் இரண்டு கோப்பை "டீ'' சாப்பிடவேண்டும் என்று தீர்மானித்தான் என்பதில் மட்டும் சந்தேகமில்லே.

அவனேக் கண்டதும் ஹேமநளினி "என்ன இராமேசபாபு, என்ன உடம்பு உமக்கு?'' என்ருள் கவலேயுடன்.

"விசேஷமாய் ஒன்றுமில்லே''

"வயிறுதான் சரியாய் இராது; பித்தம் மேலிட்டு ஜீரணமாகாமலிருக்கும்; நான் சாப்பிடும் மாத்திரையில் ஒன்றை—''

ஹேமநளினி புன்சிரிப்புடன் "என்ன, அப்பா, எல்லாரிடமும் அந்த மாத்திரைகளேச் சாப்பிடச் சொல்வதே உமக்கு வழக்கமாய்விட்டது; ஆனுல் அப்படி சாப்பிட்டதால் ஸ்வஸ்தமானவர் மட்டும் ஒருவருமில்லேயே.''

அந்நதபாபு: "ஒருவருக்கும் கெடுதல் ஏற்படவில்லேயே; அதே போதும்எனக்கு. நான் எத்தனேயோபரீக்ஷித்துப் பார்த்ததில் இதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது.''

ஹேமநளினி: "புதிதாய் எந்தமாத்திரை கிடைத்தாலும் பத்துநாள் இப்படி அதைப்பற்றியே சிலாகித்துப் பேசுகிறீர்.''

அந்நதபாபு: "நான் என்ன சொன்னுலும் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லே. வேண்டுமானுல் அக்ஷயனேக் கேட்டுப் பாருங்கள்.''

ஒருவேளே அக்ஷயனேச் சாக்ஷியாய்க் கூப்பிட்டுவிடுவாரோ என்று பயந்து ஹேமநளினி மேல்ப்பேசாமலிருந்தாள். ஆயினும் அந்த நிமிஷமே, கூப்பிடாமலே சாக்ஷிசொல்ல வந்தவன்போல் அக்ஷயன் வந்து தோன்றினுன். வந்ததும் அந்நதபாபுவைப் பார்த்து "அந்த மாத்திரைஇன்னென்று வேண்டும் எனக்கு, நேற்று சாப்பிட்டது நிரம்ப அநுகூலமாய் இருக்கிறது. இன்றைக்கு உடம்பு குணமாய் இருக்கிறது.'' என்று சொல்லவே அந்நதபாபு தன் மகளேப் பார்த்துத் திரும்பினுர்; நாம் வென்று விட்டோம் என்ற சந்தோஷம் அவர் பார்வையிலிருந்து நன்கு விளங்கிற்று.

(தொடரும்)

இரட்டைப் புலவர் சரித்திரம் *

இது 'உலக ரகசியம்' பத்திராதிபர் சி. கு. நாராயணசாமி முதலியார் எழுதியது. கர்ணபரம்பரையாய் வழங்கி வருவனவும், ஆங்காங்கு கவிகளின் பாடல்களில் பதிந்திருப்பனவும் தற்காலத்திய சரித்திர ஆராய்ச்சியால் அறியப்பட்டனவுமாகிய பலவகை மேற்கோள்களேயும் கொண்டு இவர் இரட்டையரின் சரிதத்தை இனிய எளிய நடையில் எழுதியிருக்கின்ருர். இவ்விதம் ஏனய புலவர்களின் சரிதங்களும் எழுதப் பெறின் புலவர்களின் பாடல்களேப் படிப்பவருக்கு உத்சாகமும் ஊக்கமும் வளரும். ஒரு கவியின் மனேபாவத்தையும்அவனுடைய சொல்லழகின் இன்பத்தையும் முற்றும் உணரவேண்டுமானுல் அவனுடைய சரித்தைநன்கு அறிவது அவசியம் என்பதை உணர்ந்து யாவரும் இதுபோன்ற முயற்சிகளே வரவேற்பது கடனுகும். இந்தப் புஸ்தகத்தின் தலேப்பில் "பழந்தமிழ் வாணர் வகை. க.'' என்றிருப்பதிலிருந்து இதுபோன்ற புஸ்தகங்கள் பல வெளி வருமென்று நம்புகிருேம்.

"புஸ்தகப் பிரியன்.''

---

* இந்தப் புஸ்தகம் விலே அணு எட்டு. வேண்டுபவர் சென்னே ஜியார்ஜ் டவுன், கொண்டி செட்டித் தெருவு, வி. நாராயணன் கம்பெனியிலிருந்து பெறலாம்.

துப்பறியும் நாவல்கள்.

சுந்தர் சிங்

அல்லது பாஸ்கர விலாஸ்

படுகொலை ரூ 1-12

சிவ குமாரன்

அல்லது கொலைஞன் யார்? ரூ 1-0

ஞானம்பாள்

அல்லது கள்வர் கவர்ந்த

கல்யாணப் பெண் ரூ 0-12

வி. நாராயணன் & கம்பெனி,

4, கொண்டி செட்டித் தெரு, சென்னை.

பரத நாட்டின் நிலைமை.

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒரு புறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச் சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர் நிலைமை யெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத் தொழிலை விருத்தி செய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்று சுகவாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனையவேண்டு மென்பதே இந்நூலின் நோக்கமாகும். விலை ரூபா. 1—0—0

ஆரிய சரித்திரம். நீதிக் கதைகள்.

சுமார் 300-பக்கங்கள் உள்ளது; சித்திரப்படங்களும் அமையப்பெற்றது; நான்காம்பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா. 1—0—0

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உத்யலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பீயர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழி பெயர்த்தமைத்தது. விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. விலை ரு. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிளாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

சுதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

வி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிக்க வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்த சிரோன்மணிகளுக்கு இந்நூல் மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்.

கிருஷ்ணஸ்வாமி சர்மா

அவர்களால் எழுதப்பட்டது.	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மயிக்கிளர்ச்சி யுண்டாக்ககூடியதாயுமுள்ளது. ஹாஸ்யச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையை உடையது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

"தமிழ் உலகு"

சென்னை மைலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் S. பட்டாபிராமன், எம். ஏ. ஆல் வெளியிடப் பட்டுவரும் இவ்வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையைப்பற்றி நமது அபிப்பிராயத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். அவருடைய புத்தகங்களின் உரிமையை வகித்து வரும் மாக்மிலன் கம்பெனியாரும் இதற்கிணங்கி இருக்கின்றனர். சித்திராவென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. மொழி பெயர்ப்பில் மகாகவியின் ஆழ்ந்த கருத்து பின்னப்படாமலிருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பக்கங்களும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல விஷயங்களைப்பற்றிய வியாசங்கள் வெளியாகின்றன. தாய்பாஷையை அபிவிருத்திசெய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகையை அன்னார் நடத்திவருவதால் தமிழ் நாட்டினர் இதனை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நாம் கூறத்தேவையில்லை

சுதேசமித்திரன், 16—8—1922

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)

ஞாயிற்றுகிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப்பத்திரிகை.

பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விபரம் :—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் 3 0 0	½-வருஷம் 3 8 0
1-வருஷம் 5 0 0	1-வருஷம் 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது ; பிரதிவாரம் லௌகீக விஷயங்களைப்பற்றி, குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் பெரியோர்களின் வாழ்நாட்களைப்பற்றிய வியாசங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் தமிழ்க்கவிகளின் பாடல்கள் வேறு தமிழ்ப்புஸ்தகங்கள் இவைகளின் விமரிசனங்களும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

விளம்பர விகிதம்:—சென்னை, மைலாப்பூர், "தமிழ் உலகு" மானேஜருக்கு எழுதி யறிந்து கொள்ளவும்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம் : "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams : "Adimoorthi" Benares.

சுதேசியமானது ! உபயோகமுள்ளது ! !

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.